மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஒரு யோசனை என்ற அளவிற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். உங்களுக்கு இருக்கிற சிரமமும்புரிகிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குள்ள சிரமங்களை யும் இங்கே நாம் புரிந்து கொண்டு இருக்கிறோம். ஆகையினால் கூடுகின்ற சபை 9.30 மணி என்ற அளவிற்குக் கூடி 9 மணிக்குள் உங்களிடம் கொடுக்கிற அளவிற்கு ஏற்பாடு செய்தால் வசதியாக இருக்குமா என்பதைப்பற்றி நீங்கள் சிந்தித்து முடிவெடுக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சிந்திப்பதல்ல. ரூல்ஸ் கமிட்டியிலே முடிவெடுத்தால் நான் அந்த முடிவை கடைப் பிடிக்கத் தயாராக இருக்கிறேன். திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அங்கே 11 மணிஎன்றஅளவில் அவை கூடுவ தால் அதிலே பல வசதிகள் ஏற்படுகின்றன. அங்கே அதற்குள் ஆபீஸ் திறந்து விடுவார்கள். அதிகாரிகள் வந்திருப்பார்கள், அவர்கள் மூலமாகத் தகவல்களைப் பெறுவதற்கு வசதிகள்கிடைத்து விடும், ஆகவே அதிலே சிரமம் இல்லை.

திரு. மு. கருணாநிதி : 9.30மணி என்று சொன்னாரே, என்ன ஆயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூல்ஸ் கமிட்டியை கூட்டி நீங்கள் எல்லாம் முடிவு செய்யுங்கள்.

திரு. துரை முருகன் : அமைச்சரைப் பார்த்து நாங்கள் சொல்வது என்பது எல்லாம் நடைமுறையிலே முடியாது, ஆகவே அது வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் தங்கள் தொகுதி சம்பந்தப்பட்ட விஷயங்களுக்காக அமைச்சர்களிடம் போகும்போது இதற்குப் போகக் கூடாதா ?

திரு. துரை முருகன் : அந்த நேரத்திலே நாங்கள் குளிக்க வேண்டாமா ? அமைச்சரைப் போய் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா ?

3. உரிமைப் பிரச்சினை.

(அ) ‘‘ அண்ணா ’’ நாளிதழ்மீது உரிமை மீறல் பிரச்சினை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு, துரைமுருகன் அவர்களும், திரு. சாதிக் பாட்சா அவர்களும், ‘ அண்ணா ’ நாளி தழ்மீது கீழ்க்கண்ட அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத் துள்ளார்கள்.

'' 25—7—1977 தேதியில் அண்ணு நாளேட்டில் வெளி வந்த 15—7—1977 ல் நடைபெற்ற சட்ட மன்ற நடவடிக்கை களைப்பற்றிய செய்தியில் ' கருணுநிதி புகழ் ஆரம் ' ' புரட்சித் தலைவரின் கொடுத்து சிவந்த கரம் ' என்ற தலைப்பில் ' முதலமைச் சரின் கரத்தைக் கொடுத்து கொடுத்து சிவந்த கரம் என்பார்கள், அதை நான் ஒப்புக் கொள்கிறேன் ' என்று மட்டும் போட்டுவிட்டு இதைத் தொடர்ந்து எதிர்க்கட்சித்தலைவர் கலைஞர் கூறிய 'எனது கரம் கட்சிப் பணத்தை எடுத்து சிவந்த கரம் அல்ல என்பதை எம்.ஜி.ஆர். அவர்கள் ஒத்துக் கொள்வாாகள் ' என்ற வாச கத்தை வேண்டுமென்றே வெளியிடாமல் சபை நடவடிக்கைகளை மறைத்து தவருன எண்ணம் ஏற்படும்படி செய்யப்பட்டு இருப்ப தால் இந்த அவையின் உரிமை மீறல் ஏற்பட்டு இருக்கிறது.

இத்துடன் 15—7—1977 தேதிய அண்ணு நாளேடு இணைக்கப் பட்டு இருக்கிறது ''

உறுப்பினர் அவர்களின் அறிக்கையே மிக விளக்கமாக இருப்ப தால், அவர்கள் மீண்டும் விளக்கம் கூற வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இதுபற்றிய எனது தீர்ப்பு :

''15—7—1977 அன்றைய ' அண்ணு ' நாளிதழையும், அன்றைய நிகழ்ச்சிக் குறிப்புகளையும் பார்த்தேன் அறிக்கையில் கூறியுள்ளபடி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கூறியதன் பின்பகுதி விடுபட்டுப் போயிருக்கிறது ஆனல், பத்திரிகையில் கொடுத்துள்ள தலைப்பு ' கருணுநிதி புகழாரம் ', எனவே, அவ ரது புகழ்ச்சிச் சொற்களை மட்டும் பிரசுரித்து இருக்கிருர்கள் என்று கருதலாம். ஆயினும், 23—7—1977 அன்று இப் பேரவை யில் நான் ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளேன். இப்பேரவையின் நடவடிக்கைகளை வெளியிடும்போது ஒவ்வொரு உறுப்பினரின் பேச்சையும் முழுவதும் வெளியிட முடியாவிட்டாலும், அவரது பேச்சின் மையக் கருத்து மாருமல் அவரது பேச்சின் சுருக்கம் வெளியிடப்படலாம்.

'அண்ணு ' நாளிதழில் வெளியிடப்பட்டுள்ளது எனது தீர்ப்பு வழங்கப்பட்ட நாளுக்கு முற்பட்டதாகும். எனவே, மீண்டும் எல்லாப் பத்திரிகைகளுக்கும் எனது வேண்டுகோளை நினைவுறுத்தி, இப்போது கொடுத்துள்ள அறிக்கையில் 'உரிமை மீறல் குறித்த மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். ''